# தொல்காப்பியம்- எழுத்ததிகாரம்
## இயல் 1. நூன்மரபு
## இளம்பூரணர் உரை
## முதலாவது "நூன்மரபு"

இவ்வோத்து என்நுதலிற்றோவெனின், அதுவும் அதன் பெயர் உரைப்பவே அடங்கும். இவ்வதிகாரத்தாற் சொல்லப்படும் எழுத்திலக்கணத் தினை ஓராற்றால் தொகுத்து உணர்த்துதலின், **நூன்மரபு** என்னும் பெயர்த்து. இதனுட் கூறுகின்ற இலக்கணம் மொழியிடை (நின்ற) எழுத்திற்கன்றி, தனிநின்ற எழுத்திற்கென உணர்க.

**நூற்பா:01 (எழுத்தெனப்படுப)**

**எழுத்தெனப் படுப** எழுத்து எனப்படுப
**வகரமுத னகர விறுவாய்** அகர முதல் னகர இறுவாய்
**முப்பஃ தென்ப** முப்பஃது என்ப
**சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே.** (01) சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடையே.

**இளம்பூரணர் உரை:**

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின், எழுத்துக்களது பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

பதவுரை

இதன்பொருள்

எழுத்து எனப்படுப= எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன;
அகரம் முதல் னகர இறுவாய்= அகரமாகிய முதலை உடையனவும், னகரமாகிய இறுவாயினை உடையனவுமாகிய;
முப்பஃது என்ப= முப்பதென்று சொல்லுப (ஆசிரியர்);
சார்ந்துவரல் மரபின் மூன்றும் அலங்கடை= சார்ந்துவருதலாகிய இலக்கணத்தினையுடைய மூன்றும் அல்லாவிடத்து.
மூன்றும் ஆனவிடத்து முப்பத்து மூன்று என்று சொல்லுப என்றவாறு.

உதாரணம்

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ,ஐ,ஒ, ஓ, ஔ- க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்- என வரும்.

விளக்கம்

**எனப்படுப** என்ற சிறப்பான், அளபெடையும் உயிர்மெய்யும் வரிவடிவம் சிறப்பில்லா எழுத்தாகக் கொள்ளப்பட்டன. அ, ஆ- என்பன பெயர். முறை அம்முறை. தொகை முப்பது.
அவற்றுள் அகரம் தானும் இயங்கித் தனிமெய்களை இயக்குதற் சிறப்பான், முன்வைக்கப்பட்டது.
னகரம் வீடு பேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான் பின்வைக்கப்பட்டது.
தொகை (யென்பது) தொகையுட் டொகையும், தொகையுள்வகையும், தொகையுள் விரியும், வகையுட் டொகையும், வகையுள் வகையும், வகையுள் விரியும், விரியுட் டொகையும், விரியுள் வகையும், விரியுள் விரியும் என ஒன்பது வகைப்படும்.
எழுத்தென்பது தொகையுட்டொகை. முப்பதென்பது அதன்வகை. முப்பத்து மூன்றுஎன்பது, அதன் விரி.
முப்பதென்பது, வகையுட் டொகை. முப்பத்து மூன்று என்பது அதன் வகை. அளபெடை தலைப்பெய்து நாற்பதென்பது அதன் விரி.
முப்பத்து மூன்றென்பது விரியுட் டொகை. நாற்பதென்பது அதன்வகை. உயிர்மெய் தலைப்பெய்து இருநூற்றைம்பத்தாறென்பது அதன் விரி.

செய்யுளின்பம் நோக்கி வகரம் நீக்கிப் பகரம் இடப்பட்டது. அகரமுதல் னகரவிறுவாய் என்ன, இருபெயரொட்டாகுபெயரான் முப்பதன் மேல்நின்றன.

**நூற்பா:02 (அவைதாம்)**

**அவைதாங்** அவைதாம்
**குற்றியலிகரங் குற்றியலுகர மாய்த மென்ற** குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
**முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன.** (02) முப்பால் புள்ளியும் எழுத்து ஓரன்ன.

**இளம்பூரணர் உரை:**

இது, மேல் சார்ந்துவரும் என்னப்பட்ட மூன்றற்கும் பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

பதவுரை

இதன்பொருள்

அவைதாம்= மேற் சார்ந்துவரும் என்னப்பட்டவைதாம்;
குற்றியலிகரம் குற்றியலுகரம்= குற்றியலிகரமும் குற்றியலுகரமும்;
ஆய்தம் என்ற முப்பால் புள்ளியும்= ஆய்தமும் என்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளியும் என இவை;
எழுத்து ஓர் அன்ன= (அவை) மேற்சொல்லப்பட்ட முப்பது எழுத்தோடு ஒரு தன்மைய.

விளக்கம்

அப்பெயர் பெயர். அம்முறை முறை. 'எழுத்தோரன்ன' என வேண்டா கூறியவதனான், முன் 'எனப்படுப' என்ற சிறப்பு அம்மூன்றற்கும் கொள்ளக் கிடந்தமையின், அது விலக்குதல் பெறுதும் என்பது.
குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என்னும் எ்ண்ணும்மை விகாரத்தால் தொக்கன.
சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங்கோல் ஆகாது, அதுபோல இகர வுகரங்கள் குறுகின விடத்தும் அவை உயிர் ஆகற்பாலன. அவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும், பொருள் வேற்றுமையும் நோக்கி வேறெழுத்தென்று வேண்டினார் என உணர்க.

**நூற்பா:03 (அவற்றுள்)**

**அவற்றுள்** அவற்றுள்
**அ இ உ** அ இ உ
**எ ஒ வென்னு மப்பா லைந்து** எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்
**மோரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.** (03) ஓர் அளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப.

இளம்பூரணர் உரை:

இது, மேற்கூறப்பட்டனவற்றிற்கு அளபும் குறியும் உணர்த்துதல் நுதலிற்று.

பதவுரை

இதன்பொருள்

அவற்றுள்= மேற்கூறப்பட்ட எழுத்தினுள்;
அ இ உ எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்= அ இ உ எ ஒ என்று சொல்லப்படுகின்ற அக்கூற்று ஐந்தும்;
ஓர் அளபு இசைக்கும்= (ஒரோவொன்று) ஓர் அளபாக இசைக்கும்;
குற்றெழுத்து என்ப= (அவைதாம்) குற்றெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர் (புலவர்).

விளக்கம்

இவர் காரணம் பற்றியன்றிக் குறியிடார். ஆகலின், இது தன் குறுமையான் இக்குறி பெற்றது. இக்குறியை ஆண்டவாறு மேல்வழிக் கண்டு கொள்க.

**நூற்பா:04 (ஆஈஊஏஐ)**

**ஆ ஈ ஊ ஏ ஐ**
**ஓ ஔ வென்னு மப்பா லேழு**
**மீரள பிசைக்கு நெட்டெழுத் தென்ப.** (04)

**ஆ ஈ ஊ ஏ ஐ**
**ஔ என்னும் அப்பால் ஏழும்**
**ஈர் அளபு இசைக்கும்**
**நெட்டெழுத்து என்ப.**

இளம்பூரணர் உரை:

இதுவும் அது.

பதவுரை

இதன்பொருள்

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்= ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்று சொல்லப்படுகின்ற அக்கூற்று ஏழும்;

ஈர் அளபு இசைக்கும்= (ஒரோவொன்று) இரண்டு மாத்திரையாக ஒலிக்கும்;

நெட்டெழுத்து என்ப= (அவைதாம்) நெட்டெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர் (புலவர்).

விளக்கம்

ஐகார ஔகாரங்களுக்கு இனம் இல்லையெனினும், மாத்திரை யொப்புமையான் அவை நெட்டெழுத்து எனப்பட்டன.

**நூற்பா:05 (மூவளபிசைத்)**

**மூவள பிசைத்த லோரெழுத் தின்றே.** (05) **மூ அளபு இசைத்தல் ஓர் எழுத்து இன்றே.**

இளம்பூரணர் உரை:

இது உயிரளபெடை எழுத்திற்கு மாத்திரை கூறுதல் நுதலிற்று.

இதன்பொருள்

மூ அளபு இசைத்தல்= மூன்று மாத்திரையாக ஒலித்தல்

ஓர் எழுத்து இன்று= இயல்பாகிய ஓர் எழுத்திற்கு இல்லை (விகாரமாகிய இரண்டு கூடியதற்கு உண்டு).

**நூற்பா:06 (நீட்டம்)**

**நீட்டம் வேண்டி னவ்வள புடைய**
**கூட்டி யெழூஉத லென்மனார் புலவர்.** (06)

**நீட்டம் வேண்டின் அவ் அளபு உடைய**
**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்.**

இது, உயிரளபெடை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்

நீட்டம் வேண்டின்= நீண்ட மாத்திரையையுடைய அளபெடை எழுத்துப்பெற வேண்டின்;

அ அளபு உடைய கூட்டி எழூஉதல்= மேற்கூறிய இரண்டளபுடைய நெடிலையும் ஓர் அளபுடையை குறிலையும் (பிளவுபடாமற்) கூட்டி எழூஉக;

என்மனார் புலவர்= என்று சொல்லுவர் புலவர்.

**நூற்பா:07 (கண்ணிமை)**

**கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை** **கண் இமை நொடி என அவ்வே மாத்திரை**

**நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே.** (07) **நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே.**

இஃது, அம்மாத்திரை யிலக்கணம் கூறுதல் நுதலிற்று.

இதன் பொருள்

கண்ணிமை என் நொடி என அவ் மாத்திரை= கண்ணிமையும் நொடியுமாகிய அவை மாத்திரைக்கு அளபு;

நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே= (இது) நுண்ணிதாக நூல் இலக்கணத்தினை உணர்ந்த ஆசிரியர் கண்ட நெறி.

இமையென்றது இமைத்தற்றொழிலை. நொடியென்றது நொடியிற் பிறந்த ஓசையை. தன் குறிப்பு இன்றி நிகழ்தலின், இமை முன் கூறப்பட்டது. நிறுத்தளத்தல், பெய்தளத்தல், நீட்டியளத்தல், நெறித்தளத்தல், தேங்கமுகத்தளத்தல், சார்த்தியளத்தல், எண்ணியளத்தல் என எழுவகைய என்னும் அளவினுள், இது சார்த்தியளத்தல். நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறு என்றதனான் நாலுழக்கு கொண்டது நாழி யென்றாற் போல, அவ்வளவைக்கு அளவை பெறாமை அறிக.

**நூற்பா:08 (ஔகார)**

**ஔகார விறுவாய்ப்** **ஔகார இறுவாய்ப்**

**பன்னீ ரெழுத்து முயிரென மொழிப.** (08) **பன் ஈர் எழுத்தும் உயிர் என மொழிப.**

இது மேற்கூறிய குறிலையும் நெடிலையும் தொகுத்து வேறு ஓர் குறியிடுதல் நுதலிற்று.

இதன்பொருள்

ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும்= ஔகாரமாகிய இறுதியையுடைய பன்னிரண்டு எழுத்தினையும்,

உயிர் என மொழிப= உயிர் என்னும் குறியினையுடைய என்று சொல்லுவர்.

**நூற்பா:09 (னகார)**

**னகார விறுவாய்ப்** **னகார இறுவாய்ப்**

**பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப.** (09)

**பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப.**

இது,மேற்கூறிய உயிரல்லா எழுத்திற்கு ஓர் குறியிடுதல் நுதலிற்று.

இதன்பொருள்

னகார இறுவாய்ப் பதினெண் எழுத்தும்= னகரமாகிய இறுதியையுடைய் பதினெட்டு எழுத்தினையும்,

மெய் என மொழிப. மெய்யென்னும் குறியினையுடைய என்று சொல்லுவர்.

**நூற்பா:10 (மெய்யோ)**

**மெய்யோ டியையினு முயிரிய றிரியா.** (10) **மெய்யோடு இயையினும் உயிர் இயல் திரியா.**

இஃது, உயிர்மெய்க்கு அளபு கூறுதல் நுதலிற்று.

இதன்பொருள்

மெய்யோடு இயையினும்= (உயிர்மெய்யாவன) மெய்களோடு உயிர் இயையப் பிறந்த நிலைமையவாயினும்;

உயிர் இயல் திரியா= (அவ்வுயிர்கள் அவ்வியைபின்கண்ணே வேறு ஓர் எழுத்தாய் நின்றமையின், மெய்யோடு இயைபின்றி நின்ற) உயிர்களது இயல்பில் திரியா.

உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க்கூட்டத்தினை, 'மெய்யோடியையினும்' என உயிர்மேல் வைத்துக் கூறியது, அவ்வுயிரின் மாத்திரையே இதற்கு மாத்திரையாகக் கூறுகின்றமை நோக்கிப் போலும். இயலென்றது பெரும்பான்மை மாத்திரையினை. சிறுபான்மை குறியும் எண்ணும் கொள்க.

க எனவும், கா எனவும் அவ்வாறு நின்றமை அறிக.

**நூற்பா:11 (மெய்யதளபே)**

மெய்ய தளபே யரையென மொழிப. (11) **மெய்யது அளபே அரை என மொழிப.**

இது தனிமெய்க்கு அளபு கூறுதல் நுதலிற்று.

இதன்பொருள்

மெய்யின் அளபு= மெய்யது மாத்திரையினை;

அரை என மொழிப= (ஒரோவொன்று) அரை மாத்திரையுடையவென்று சொல்லுவர்.

காக்கை, கோங்கு எனக் கண்டுகொள்க. ஈண்டு வேற்றுமை நயமின்றி ஒற்றுமை நயம் கருதப்பட்டது.

**நூற்பா:12 (அவ்வியனிலை)**

**அவ்விய னிலையு மேனை மூன்றே.** (12) **அவ் இயல் நிலையும் ஏனை மூன்றே.**

இது, சார்பிற் றோற்றத்து எழுத்து மூன்றற்கும் அளபு கூறுதல் நுதலிற்று.

இதன்பொருள்: அ இயல் நிலையும்= மேற்கூறிய அரை மாத்திரையாகிய அவ்வியல்பின்கண்ணே நிற்கும்;

ஏனைமூன்று= ஒழிந்த சார்பிற் றோற்றத்து மூன்றும்.

கேண்மியா, நாகு, எஃகு எனக் கண்டு கொள்க. (ஏகாரம் ஈற்றசை).

**நூற்பா:13 (அரையளபு)**

**அரையளபு குறுகன் மகர முடைத்தே** **அரை அளபு குறுகல் மகரம் உடைத்தே**
**யிசையிட னருகுந் தெரியுங் காலை.** (13) **இசை இடன் அருகும் தெரியும் காலை.**

இது,மெய்களுள் ஒன்றற்கு மாத்திரைச் சுருக்கம் கூறுதல் நுதலிற்று.

இதன்பொருள்

அரை அளபு குறுகன் மகரம் உடைத்து= அரையளபாகிய வெல்லையிற் குறுகிக் கான்மாத்திரை யாதலை மகரமெய் உடைத்து. (அஃது யாண்டோவெனின்);

இசையிடன் அருகும்= வேறு ஓர் எழுத்தினது ஒலியின்கண் அது சிறுபான்மையாகி வரும்;

தெரியுங்காலை= ஆராயுங்காலத்து.

உதாரணம்

போன்ம், வரும்வண்ணக்கன் என வரும். கான்மாத்திரையென்பது உரையிற்கோடல். (ஏகாரம் ஈற்றசை).

**நூற்பா:14 (உட்பெறு)**

**உட்பெறு புள்ளி யுருவா கும்மே** (14) **உள் பெறு புள்ளி உரு ஆகும்மே.**

இது, பகரத்தின் மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்தல் நுதலிற்று.

இதன்பொருள்

உள்பெறு புள்ளி உருவு ஆகும்= புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாற்பெறும் புள்ளி மகரத்திற்கு வடிவாம். (அஃதின்மை பகரத்திற்கு வடிவாம்.)

உதாரணம்: **ம, ப** எனக் கண்டுகொள்க.

(உள்ளாற்பெறும் புள்ளி குறுகிய மகரத்திற்கு வடிவாம் என்பதே, இச்சூத்திரத்திற்கு நேர் உரை. ஏகாரம் ஈற்றசை).

**நூற்பா:15 (மெய்யினியற்கை)**

**மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்.** (15) **மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்.**

இஃது, உயிர்மெய்யோடு தனிமெய்யிடை வடிவு வேற்றுமை செய்தல் நுதலிற்று.

இதன்பொருள்

மெய்யின் இயற்கை= தனிமெய்யினது இயல்பு;

புள்ளியொடு நிலையல்= புள்ளியொடு நிற்றல். (உயிர்மெய்யினது இயல்பு புள்ளியின்றி நிற்றல்).

**க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்** - எனக் கண்டு கொள்க.

**நூற்பா:16 (எகர)**

**எகர வொகரத் தியற்கையு மற்றே.** (16) **எகர ஒகரத்து இயற்கையும் அற்றே.**

இஃது, எகர ஒகரங்கட்கு ஏகார ஓகாரங்களோடு வடிவு வேற்றுமை செய்தல் நுதலிற்று.

இதன்பொருள்

எகர ஒகரத்து இயற்கையும் அற்று= எகர ஒகரங்களது இயல்பும், அவ்வாறு புள்ளிபெறும் இயல்பிற்று.

(ஏகார ஓகாரங்களது இயல்பு, அப்புள்ளிபெறா இயல்பிற்று). (ஏகாரம் ஈற்றசை).

உதாரணம்: **எ், ஒ்.**

**நூற்பா:17 (புள்ளியில்லா)**

**புள்ளி யில்லா வெல்லா மெய்யு** **புள்ளி இல்லா எல்லா மெய்யும்**
**முருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலு** **உருவு உருவு ஆகி அகரமோடு உயிர்த்தலும்**
**மேனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலு** **ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும்**
**மாயீ ரியல வுயிர்த்த லாறே.** (17) **அ ஈர் இயல உயிர்த்தல் ஆறே.**

இஃது உயிரும் மெய்யும் கூடுமாறு உணர்த்தல் நுதலிற்று.

இதன்பொருள்

எல்லா மெய்யும் புள்ளி இல்லாக= எல்லா மெய்களும் புள்ளி இல்லையாம்படியாக;
உருவு உருவு ஆகி= தத்தம் முன்னை வடிவே இன்னும் வடிவாக;
அகரமொடு உயிர்த்தலும்= அகரத்தோடு கூடி ஒலித்தலும்;
ஏனை உயிரோடு உருவோடு உருவு திரிந்து உயிர்த்தலும்= ஏனை உயிரோடு உருவு வேறுபட்டு ஒலித்தலுமாகிய;
அ ஈர் இயல= அவ்விரண்டு இயல்பினையுடைய;
உயிர்த்தல் ஆறு= அவை ஒலிக்கும் முறைமை.

"தன்னின முடித்தல்" என்பதனான், அளபெடை உயிரோடும் சார்பிற் றோற்றத்து உயிரோடும் கூடும் உயிர்மெய்யும் கொள்க.

உதாரணம்: உருவு உருவாகி உயிர்த்தல் க ங எனக்கண்டு கொள்க. உருவு திரிந்து உயிர்த்தல் கா ஙா எனக் கண்டுகொள்க.

ஈண்டு உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க் கூட்டத்தினை, எல்லா மெய்யுமென்று மெய்மேல் வைத்துக் கூறியது, அது முன்கூறிக் கூறப்படுதல் நோக்கிப் போலும். உயிர்மெய் யென்பதனை, ஒற்றுமைகொள்வுழி, உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை யெனவும், வேற்றுமை கொள்வுழி உம்மைத்தொகையெனவும் கொள்க.

'இல்லாக' என்பது, 'இல்லா' என நின்றது. உருவு திரிந்து உயிர்த்தல், மேலும் கீழும் விலங்கு பெறுவன விலங்கு பெற்று உயிர்த்தலும், புள்ளிபெறுவன புள்ளிபெற்று உயிர்த்தலும், புள்ளியும் கோடும் உடன் பெறுவன புள்ளியும் கோடும் உடன்பெற்று உயிர்த்தலும் எனக் கொள்க.

**நூற்பா:18 (மெய்யின்வழி)**

**மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே.** (18) **மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே.**

இது, உயிர்மெய்யுள் உயிரும் மெய்யும் நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்

உயிர்= உயிர்;
மெய்யின் வழியது= மெய்களின் பின்னவாம்;
தோன்றும் நிலை= உயிர்கள் தோன்றும் நிலைமைக்கண்.

தோன்று நிலை என்றதனான், உயிர்மெய்களைப் பிரிக்குமிடத்தும் கூட்டுமிடத்தும், அவ்வாறே முன்னும் பின்னும் ஆதலைக் கொள்க. மெய்யும் உயிரும் முன்னும் பின்னும் பெற நிற்கும் என்றமையால், அக்கூட்டம் பாலும் நீரும் போல உடன் கலந்ததன்றி, விரல் நுனிகள் தலைப்பெய்தாற்போல வேறுநின்று கலந்தனவல்ல என்பது பெறுதும்.

ஈண்டு வேற்றுமைநயம் கருதப்பட்டது. (ஏ-ஈற்றசை).

**நூற்பா:19 (வல்லெழுத்)**

**வல்லெழுத் தென்ப கசட தபற** (19) **வல்லெழுத்து என்ப க ச ட த ப ற.**

இது, தனிமெய்களுள் சிலவற்றிற்கு வேறு ஓர் குறியிடுதல் நுதலிற்று.

இதன்பொருள்

வல்லெழுத்து என்ப= வல்லெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர்;

க ச ட த ப ற= க ச ட த ப ற என்னும் தனிமெய்களை.

வல்லென்று இசைத்தலானும், வல் என்ற தலைவளியாற் பிறத்தலானும் வல்லெழுத்து எனப்பட்டது. மொழிக்கு முதலாம் எழுத்து நான்கு உளவாகலானும், அவற்றால் வழக்குப் பயிற்சி பெரிதாகலானும் (வல்லினம்) முன் கூறப்பட்டது. (க ச ட த ப ற என்னும் மெய்கள் **க், ச், ட், த், ப், ற்**.)

**நூற்பா:20 (மெல்லெழுத்)**

**மெல்லெழுத் தென்ப ஙஞண நமன.** (20) **மெல்லெழுத்து என்ப ங ஞ ண ந ம ன.**

இதுவும் அது.

இதன்பொருள்

மெல்லமுத்து என்ப= மெல்லெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர்;

ங ஞ ண ந ம ன= ங ஞ ண ந ம ன என்னும் தனிமெய்களை.

மெல்லென்று பிறத்தலானும், மெல் என்ற மூக்கின் வளியாற் பிறத்தலானும், மெல்லெழுத்து எனப்பட்டன. மொழிக்கு முதலாமெழுத்து மூன்று உளவாகலானும் அவற்றின் வழக்குப் பயிற்சியானும் (மெல்லினம்) முதலாமெழுத்துச் சிறுபான்மை வழக்கினவாய் இரண்டாகிய இடையினத்தின்முன் வைக்கப்பட்டது. வன்மை மென்மை கூறலின், எழுத்து அருவன்றி உருவாதல் பெறப்பட்டது. உயிருக்கும் குறுமை நெடுமை கூறலின், உருவென்பது பெறுதும். (ங ஞ ண ந ம ன என்னும் தனிமெய்கள் **ங், ஞ், ண், ந், ம், ன்**.)

**நூற்பா:21 (இடையெழுத்)**

**இடையெழுத் தென்ப யரல வழள.** (21) **இடையெழுத்து என்ப ய ர ல வ ழ ள.**

இதுவும் அது.

இதன்பொருள்

இடையெழுத்து என்ப= இடையெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர்;

ய ர ல வ ழ ள = **ய, ர, ல, வ, ழ, ள** என்னும் தனிமெய்களை.

இடைநிகரனவாகி ஒலித்தலானும், இடைநிகர்த்தாய மிடற்று வளியாற் பிறத்தலானும் இடையெழுத்து எனப்பட்டது. (ய ர ல வ ழ ள என்னும் தனிமெய்கள் **ய், ர், ல், வ், ழ், ள்**.)

**நூற்பா:22 (அம்மூவாறு)**

**அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்**
**மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை.** (22) **அ மூ ஆறும் வழஙகு இயல் மருங்கின் மெய் மயக்கு உடன் நிலை தெரியும் காலை.**

இது தனிமெய்ம்மயக்கத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்

அ மூ ஆறும்= மேற் சொல்லப்பட்ட (மூவாறு) பதினெட்டு மெய்யும்;

வழங்கு இயல் மருங்கின்= தம்மை மொழிப்படுத்தி வழங்கும் இயல்பு உளதாமிடத்து;
மெய்ம்மயக்கு= மெய்ம்மயக்கம் என்றும்;
உடனிலை=உடனிலை மயக்கம் என இருவகைய;
தெரியும் காலை= (அவை மயங்குமுறைமை) ஆராயும் காலத்து.
உயிர்,மெய், உயிர்மெய் மூன்றனையும் உறழ்ச்சி வகையான் உறழ ஒன்பது உளவாமன்றே, அவற்றுள் தனிமெய்யொடு தனிமெய்மயக்கம் ஒன்றே கூறியது என்னெனின், மற்றவற்றிற்கு வரையறையின்மையின், வரையறையுடைய தனிமெய்மயக்கமே கூறியொழிந்தார் என உணர்க. மெய் என்றதனால், தனிமெய்யோடு உயிர்மெய்மயக்கமின்றி, தனிமெய்யோடு தனிமெய் மயக்கமாதல் கொள்க.

**நூற்பா:23 (டறலளவென்)**

இது, மெய்மயக்கம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**டறலள வென்னும் புள்ளி முன்னர்க்** — **டறலள என்னும் புள்ளி முன்னர்க்**
**கசப வென்னு மூவெழுத் துரிய.** (23) — **கசப என்னும் மூ எழுத்து உரிய.**

இதன்பொருள்

டறலள என்னும் புள்ளி முன்னர்= ட ற ல ள என்று சொல்லப்படும் புள்ளிகளின் முன்னர்;
க ச ப என்னும் மூ எழுத்து உரிய= க ச ப என்று சொல்லப்படும் மூன்று எழுத்தும் மயங்குதற்கு உரிய.

உதாரணம்

**கட்க**, **கற்க**, செல்**க**, கொள்**க** எனவும் கட்சிறார், **கற்சி**றார், செல்**சி**றார், கொ**ள்சி**றார் எனவும், **கட்ப**, **கற்க**, **செல்ப**, கொ**ள்ப** எனவும் வரும்.

விளக்கம்

மேல் 'தெரியுங்காலை' என்றதனான், இம்மெய் மயக்கம் கூறுகின்ற சூத்திரமெல்லாம், பலபடியால் மயக்கம் கொள்ளச் சொல்நோக்கு உடையவெனினும், வழக்கினோடு பொருந்த ஒன்றனோடு ஒன்றின்றி மயங்காதென்பது கொள்க. மெய்மயக்கம் ஒருமொழிக்கும், புணர்மொழிக்கும் பொதுவாகலின், மேற்கூறும் புணர்மொழிச்செய்கையெல்லாம் தலையாய அறிவினோரை நோக்க ஒருவாற்றாற் கூறியவாறாயிற்று.

**நூற்பா:24 (அவ..லளஃகான்)**

**அவற்றுள்** — **அவற்றுள்**
**லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும். (24)** — **ல ளஃகான் முன்னர் ய வ வும் தோன்றும்.**

**இதுவும் அது.**

**இதன்பொருள்**

**அவற்றுள்= மேற்கூறிய நான்கனுள்ளும்;**
**லளஃகான் முன்னர்= லகார, ளகாரங்களின் முன்னர்;**
**யவவும் தோன்றும்= க ச ப க்களேயன்றி யகர வகரங்களும் தோன்றி மயங்கும்.**

**உதாரணம்**

**கொல்யானை, வெள்யானை, கோல்வளை, வெள்வளை எனவரும்**

**நூற்பா:25 (ஙஞணமன)**

**ஙஞணமனவெனும் புள்ளி முன்னர்த்** — **ங ஞ ண ம ன எனும் புள்ளி முன்னர்த்**
**தத்த மிசைக ளொத்தன நிலையே. (25)** — **தம் தம் மிசைகள் ஒத்தன நிலையே.**

**இதுவும் அது.**

**இதன்பொருள்**

ஙஞணநமன என்னும் புள்ளி முன்னர்= ங ஞ ண ந ம ன என்று சொல்லப்படும் புள்ளிகளின் முன்னர்;
தத்தம் மிசைகள் ஒத்தன= (நெடுங்கணக்கில்) தத்தமக்கு மேல்நிற்கும் எழுத்தாகிய க ச ட த ப ற க்கள் பொருந்தின;
நிலை= மயங்கி நிற்றற்கண். (ஏகாரம் ஈற்றசை).

உதாரணம்

தெங்கு, மஞ்சு, வண்டு, பந்து, கம்பு, கன்று எனவரும்.

நூற்பா:26 (அவற்..ணனஃகான்)

அவற்றுள் | அவற்றுள்
ணனஃகான் முன்னர்க் | ண னஃகான் முன்னர்க்
கசஞப மயவவ் வேழு முரிய. (26) | க ச ஞ ப ம ய வ ஏழும் உரிய.

இதுவும் அது.

இதன்பொருள்

அவற்றுள்= மேற்கூறப்பட்ட மெல்லெழுத்து ஆறனுள்;
ணனஃகான் முன்னர்= ணகார, னகாரங்களின் முன்னர்;
கசஞபமயவ= ஏழும் உரிய= (டறக்களேயன்றி) க ச ஞ ப ம ய வ என்று சொல்லப்படும் ஏழும் மயங்குதற்கு உரிய.

உதாரணம்

வெண்கலம், புன்கண், வெண்சாந்து, புன்செய், வெண்ஞாண், பொன்ஞாண், வெண்பலி, பொன்பெரிது, வெண்மாலை, பொன்மாலை, மண்யாது, பொன்யாது, மண்வலிது, பொன்வலிது எனவரும்.

நூற்பா:27 (ஞநமவ)

ஞநமவ வென்னும் புள்ளி முன்னர் | ஞ ந ம வ என்னும் புள்ளி முன்னர்
யஃகா னிற்றன் மெய்பெற் றன்றே. (27) | யஃகான் நிற்றல் மெய் பெற்று அன்றே.

இதுவும் அது.

இதன்பொருள்

ஞநமவ என்னும் புள்ளி முன்னர்= ஞ ந ம வ என்று சொல்லப்படுகின்ற புள்ளிகளின் முன்னர்;
யஃகான் நிற்றல் மெய் பெற்றன்றே= யகரம் மயங்கி நிற்றல் பொருண்மை பெற்றது. (ஏகாரம் ஈற்றசை.)

உதாரணம்

உரிஞ்யாது, பொருந்யாது, திரும்யாது, தெவ்யாது எனவரும்.

நூற்பா:28 (மஃகான்)

இதுவும் அது.

மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும். (28) மஃகான் புள்ளி முன் வவ்வும் தோன்றும்.

இதன்பொருள்

மஃகான் புள்ளிமுன்= மகரமாகிய புள்ளி முன்னர்;
வ உம் தோன்றும்= (பகர வகரங்களேயன்றி) வகரமும் தோன்றி மயங்கும்.

உதாரணம்

நிலம்வலிது என வரும்.

நூற்பா:29 (யரழவென்)

யரழ வென்னும் புள்ளி முன்னர் | ய ர ழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும். (29) | முதல் ஆகு எழுத்து ஙகரமொடு தோன்றும்.

இதுவும் அது.

இதன்பொருள்

யரழ என்னும் புள்ளி முன்னர்= ய ர ழ என்று சொல்லப்படுகின்ற புள்ளிகளின் முன்னர்;
முதல் ஆகு எழுத்து ஙகரமொடு தோன்றும் = மொழிக்கு முதல் ஆம் என்னப்பட்ட ஒன்பது மெய்யும் (முதலாகா) ஙகரத்தோடு தோன்றி மயங்கும்.

உதாரணம்

வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது- சிறிது, தீது, பெரிது- ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என வரும். வேய்ஙனம், வேர்ஙனம், வீழ்ஙனம் எனவும் ஒட்டுக. வேய்யாது என்புழி உடனிலையாதலான் யகரம் ஒழித்து ஒட்டுக.

நூற்பா:30 (மெய்ந்நிலை)

மெய்ந்நிலைச் சுட்டி னெல்லா வெழுத்துந் மெய்ந்நிலைச் சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முற் றாம்வரூஉம் ரழவலங் கடையே. (30) தம் முன் தாம் வரூஉம் ர ழ அலங்கடையே.

இது நிறுத்தமுறையானே *உடனிலைமயக்கம்* ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்

மெய்ந்நிலை சுட்டின்= பொருள்நிலைமைக் கருத்தின்கண்;
எல்லா எழுத்தும் தம் முன் தாம் வரும்= எல்லா மெய்யெழுத்தும் தம்முன்னே தாம் வந்து மயங்கும்;
ரழ அலங்கடை= ரகார ழகாரங்கள் அல்லாத விடத்து. (ஏகாரம் ஈற்றசை).

உதாரணம்

காக்கை, எங்ஙனம், பச்சை, மஞ்ஞை, பட்டை, மண்ணை, தத்தை, வெந்நோய், அப்பை, அம்மி, வெய்யர், எல்லி, எவ்வீ, கொள்ளி, கொற்றி, கன்னி என வரும்.

விளக்கம்

மெய்ந்நிலைச்சுட்டின் என்றதனால், 'தம்முற்றாம் வரும்' என்றது, மெய்ம்முன்னர் மெய்யென்னும் மாத்திரையன்றி, உடனிலைமெய் மேலதாம் என்பது கொள்க. 'எல்லாம்' என்றது, மேல் ய ர ழ என்ற அதிகாரம் மாற்றிவந்து நின்றது.

நூற்பா:31 (அஇஉவம்)

அஇ உவம் மூன்றும் சுட்டு. (31) அ இ உ அம் மூன்றும் சுட்டு.

இதன்பொருள்

அஇஉ அம்மூன்றும் சுட்டு= (குற்றெழுத்து என்னப்பட்ட) அ இ உ என்னும் அம்மூன்றும் சுட்டு என்னும் குறியவாம்.

உதாரணம்

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் என வரும்.

நூற்பா:32 (ஆஏஓவம்)

ஆஏ ஓவம் மூன்றும் வினா. (32) ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா.

இதன்பொருள்

ஆஏஓ அம்மூன்றும் வினா= (மேல் நெட்டெழுத்து என்னப்பட்ட)ஆ ஏ ஓ என்னும் அம்மூன்று வினா என்னும் குறியவாம்.

உதாரணம்

உண்கா, உண்கே, உண்கோ சாத்தா எனவரும்.

விளக்கம்

"தன்னின முடித்தல்" என்பதனான், எகாரமும், யகரஆகாரமும் வினாப் பெறுமெனக் கொள்க. இக்குறிகளையும் முன் குறிலென்றும், நெடிலென்றும்

**கூறிய வழியே கூறுக எனின், இவை சொல் நிலைமையிற் பெறும் குறியாகலின், ஆண்டு வையாது மொழிமரபினைச் சாரவைத்தார் என்க. இக்குறி மொழிநிலைமைக்கேல் எழுத்தின்மேல் வைத்துக்கூறியது என்னையெனின், இவ்வதிகாரத்துப் பெயர் வினையல்லனவற்றிற்குக் கருவிசெய்யாமையின் என்க.**

**நூற்பா:33 (அளபிறந்)**

**அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலு** அளபு இறந்து உயிர்த்தலும் ஒற்று இசை நீடலும்
**முளவென மொழிப விசையொடு சிவணிய** உள என மொழிப இசையொடு சிவணிய
**நரம்பின் மறைய வென்மனார் புலவர். (33)** நரம்பின் மறைய என்மனார் புலவர்.

**இஃது, எழுத்துக்கள் முற்கூறிய மாத்திரையின் நீண்டு நிற்கும் இடம் இதுவென்பது உணர்த்துதல் நுதலிற்று.**

**இதன்பொருள்**

**அளபு இறந்து உயிர்த்தலும்= (உயிரெழுத்துக்கள் எல்லாம்) தமக்குச் சொன்ன அளவினைக் கடந்து ஒலித்தலையும்;**
**ஒற்று இசைநீடலும்= ஒற்றெழுத்துக்கள் தம்மொலி முன்கூறிய அளபின் நீடலையும்;**
**இசையொடு சிவணிய நரம்பின் மறைய= (இந்நூலுட் கூறும் விளியின்கண்ணேயன்றிக்) குரல் முதலிய ஏழிசையோடு பொருந்திய நரம்பினையுடைய யாழினது இசைநூற்கண்ணும்;**
**உளஎன மொழிப என்மனார் புலவர்= உள எனச் சொல்லுவர் அவ்விசை நூலாசிரியர், என்று சொல்லுவர் புலவர்.**

**விளக்கம்**

**'ஒற்றிசை நீடலும்' என்றனர், அளபிறந்துயிர்த்தலென்றது அதிகாரத்தால் நின்ற உயிர்மேற் சேறலின், உளவென்றது அந்நீட்டிப்பு ஒருதலையன்றென்பது விளக்கிற்று. இசைநூலாசிரியரும் முதனூலாசிரியர்தாமே எனினும், 'மொழிப' என வேறொருவர்போலக் கூறியது, அதுவும் வேறுநூலாகச்செய்யப்படும் நிலைமை நோககியது போலும். மறையும் என்பதன் உம்மை விகாரத்தால் தொக்கது. அகரம் செய்யுள் விகாரம்.**

**முதலாவது நூன்மரபும் அதற்கு இளம்பூரணர் செய்த உரையும் முற்றிற்று**

**இரண்டாவது "மொழிமரபு"**

இளம்பூரணர் இயல்முன்னுரை:

இவ்வோத்து என்னபெயர்த்தோவெனின், மொழிகளுக்கு வரும் மரபு உணர்த்தினமையின் மொழிமரபு எனப்பட்டது இதனுள் கூறுகின்றது தனிநின்ற எழுத்திற்கன்றி மொழியிடை (நின்ற)எழுத்திற்கு எனவுணர்க.

**நூற்பா 34 (குற்றியலிகர)**

**குற்றிய லிகர நிற்றல் வேண்டும்** () குற்றியலிகரம் நிற்றல் வேண்டும்
**யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்** ()யா என் சினை மிசை உரை அசைக் கிளவிக்கு
**காவயின் வருஉ மகர மூர்ந்தே.** (01) ஆ வயின் வருஉம் மகரம் ஊர்ந்தே.

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், சார்பிற்றோற்றத்து எழுத்துக்களிற் குற்றியலிகரத்தில் ஒரு மொழிக் குற்றியலிகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்

குற்றியலிகரம்= ஒருமொழிக் குற்றியலிகரம்;

உரையசைக் கிளவிக்கு= உரையசைச் சொல்லாகிய மியா என் முதற்கு;
ஆவயின் வரூஉம்= (சினையாக) அச்சொற்றன்னிடத்து வருகின்ற;
யா என் சினைமிசை= யா என் சினைமிசை;
மகரம் ஊர்ந்து நிற்றல் வேண்டும்= மகர ஒற்றினை ஊர்ந்து நிற்றலை வேண்டும் (ஆசிரியன்).

உதாரணம்

கேண்மியா என வரும். மியா என்னும் சொல் இடம். மகரம் பற்றுக்கோடு. யா என்னும் சினையும் மகரம் போலக் குறுகுதற்கு ஒரு சார்பு.

**நூற்பா: 35 (புணரியனிலை)**

**புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே** () புணர் இயல் நிலை இடைக் குறுகலும் உரித்தே
**யுணரக் கூறின் முன்னர்த் தோன்றும்** (02) உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்.

இது, குற்றியலிகரம் புணர்மொழியுள்ளும் வருமென்று உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்

புணர் இயல் நிலையிடையும்= இருமொழி தம்மிற் புணர்தல் இயன்ற நிலைமைக்கண்ணும்;
குறுகல் உரித்து= அவ்விகரம் குறுகுதலுடைத்து;
உணரக்கூறின்= (ஆண்டை இடத்தினையும் பற்றுக்கோட்டினையும் ஈண்டு) உணரக்கூறப்புகின்;
முன்னர்த்தோன்றும்= (அதுவேண்டுவதில்லை) குற்றியுகரப்புணரியலுள் (அவ்விடனும் பற்றுக்கோடும்) தோன்றும்.

விளக்கம்

`புணரியனிலையிடையும் என மொழிமாற்றி உரைக்க. முன்னர்த்தோன்றுமாறு: "யகரம் வரும்வழி யிகரங் குறுகும், உகரக் கிளவி துவரத் தோன்றாது" (குற்றியலுகரப் புணரியல், 5) என்பதனுள் அறிக. ஷகரம் சார்ந்த வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

உதாரணம்

நாகியாது, வரகியாது, தெள்கியாது, எஃகியாது, கொக்கியாது, குரங்கியாது என வரும்.

**நூற்பா: 36 (நெட்டெழுத்)**

**நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்** ()நெட்டெழுத்து இம்பரும் தொடர் மொழி ஈற்றும்
**குற்றிய லுகர வல்லா றூர்ந்தே.** (03) குற்றியலுகரம் வல் ஆறு ஊர்ந்தே.

இஃது, ஒருமொழிக் குற்றியலுகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்

நெட்டெழுத்து இம்பரும்= நெட்டெழுத்தினது பின்னும்;
தொடர்மொழி ஈற்றும்= தொடர்மொழியது இறுதியினும்;
குற்றியலுகரம் வல்லாறு ஊர்ந்து (நிற்றல் வேண்டும்) குற்றியலுகரம் வல்லெழுத்து ஆறினையும் ஊர்ந்து நிற்றலைவேண்டும் (ஆசிரியன்).

விளக்கம்

"தந்து புணர்ந்துரைத்தல்"(மரபு, 100) என்னும் தந்திரவுத்தியான், முன்னின்ற "நிற்றல் வேண்டும்" என்பது ஈண்டும் புணர்க்கப்பட்டது.

உதாரணம்

நாகு, வரகு என வரும்.
நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீறும் இடம். வல்லெழுத்துப் பற்றுக்கோடு. இவ்வாறு இடமும் பற்றுக்கோடும் கூறவே, மொழிக்கு ஈறாதலும் கூறியவாறாயிற்று.

**நூற்பா: 37 (இடைப்படிற்)**

**இடைப்படிற் குறுகு மிடனு மாருண்டே** () **இடைப்படின் குறுகும் இடனுமார் உண்டே**
**கடப்பா டறிந்த புணரிய லான.** (04) **கடப்பாடு அறிந்த புணரியலான.**
இது, குற்றியலுகரம் புணர்மொழியுள்ளும் வருமென்பது உணர்த்துதல் நுதலிற்று.
இதன்பொருள்
இடைப்படின் குறுகும் இடன் உண்டு= (அவ்வுகரம்) புணர்மொழி இடைப்படினும் குறுகும் இடமுண்டு, (அதன் இடமும் பற்றுக்கோடும் யாண்டோ பெறுவதெனின்); கடப்பாடு அறிந்த புணரியலான்= அதன் புணர்ச்சி முறைமை அறியும் குற்றியலுகரப்புணரியலின் கண்ணே.
விளக்கம்
இடைப்படினும் குறுகும் என மொழிமாற்றி உரைக்க
அக்குற்றியலுகரப்புணரியலுள் "வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்/ தொல்லை யியற்கை நிலையலு முரித்தே" (குற்றியலுகரப்புணரியல், 4) என்பதனுள் வல்லொற்றுத் தொடர்மொழியும் வல்லெழுத்து வருவழியும் இடம். அவ்வல்லொற்றுத் தொடர்மொழியீற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு.
உதாரணம்
செக்குக்கணை, சுக்குக்கோடு என வரும்.
`இடன்` என்றதனான், இக்குறுக்கம் சிறுபான்மை என்றுணர்க. (ஆர், ஏ என்பன அசைகள். `புணரியலான்` என்பது வேற்றுமை மயக்கம். அகரம் சாரியை.

**நூற்பா: 38 (குறியதன்)**

**குறியதன் முன்ன ராய்தப் புள்ளி** ()**குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**
**யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.** (05) **உயிரொடு புணர்ந்த வல் ஆறன் மிசைத்தே.**
இஃது ஒருமொழி ஆய்தம் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.
இதன்பொருள்
ஆய்தப்புள்ளி= ஆய்தமாகிய புள்ளி;
குறியதன்முன்னர்= குற்றெழுத்தின் முன்னர்;
உயிரொடு புணர்ந்த வல் ஆறன் மிசைத்து= உயிரோடு புணர்ந்த வல்லெழுத்து ஆறன் மேலது.
உதாரணம்
எஃகு, கஃசு என வரும்.
விளக்கம்
குறியதன் முன்னரும் வல்லெழுத்து மிசையும் இடம். இஃது உயிரன்மையின், இதற்குப் பற்றுக்கோடு என்பதில்லை. கஃறீது என்பதனை மெய்பிறிதாகிய புணர்ச்சி (புணரியல், 7) என்பவாகலின், `புள்ளி` என்றதனான் ஆய்தத்தை மெய்ப்பாற் படுத்துக்கொள்க.ஈண்டும் உயிரென்றது, மேல் ஆய்தத் தொடர்மொழி (குற்றியலுகரப்புணரியல்,1.) என்றோதலின் பெரும்பான்மையும்

குற்றியலுகரத்தினை, வெஃகாமை முதலிய பிற உயிர்வரவு சிறுபான்மையெனக் கொள்க.

**நூற்பா: 39 (ஈறியன்)**

**ஈறியன் மருங்கினு மிசைமை தோன்றும்.** (06) **ஈறு இயல் மருங்கினும் இசைமை தோன்றும்.**

இது, அவ்வாய்தம் புணர் மொழியுள்ளும் வருமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்

ஈறு இயல்மருங்கினும்= நிலைமொழியீறு வருமொழிமுதலொடு புணர்ந்து நடக்கும் இடத்தினும்;

இசைமை தோன்றும்= ஆய்த ஒலி தோன்றும்.

எடுத்துக்காட்டு

கஃறீது, முஃடீது எனவரும். ஈண்டும் இடங்கள் அவை.

**நூற்பா: 40 (உருவினு)**

**உருவினு மிசையினு மருகித் தோன்று** () **உருவினும் இசையினும் அருகித் தோன்றும்**

**மொழிக்குறிப் பெல்லா மெழுத்தி னியலா** ()**மொழிக் குறிப்பு எல்லாம் எழுத்தின் இயலா**

**வாய்த மஃகாக் காலை யான.** (07) **ஆய்தம் அஃகாக் காலையான.**

இது, அவ்வொருமொழி ஆய்தத்திற்கு ஓர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்

உருவினும் = ஒரு பொருளினது உருவத்தின்கண்ணும்;

இசையினும்= ஓசையின்கண்ணும்;

அருகித்தோன்றும்= சிறுபான்மையாய்த் தோன்றும்;

குறிப்பு மொழி யெல்லாம்= குறிப்புமொழிகள் எல்லாம்;

எழுத்தின் இயலா= ஆய்த எழுத்தானிட்டு எழுதப்பட்டு நடவா. (அஃது எக்காலத்துமோவெனின், அன்று);

ஆய்தம் அஃகாக் காலையான= அவ்வாய்தம் தன் அரைமாத்திரை அளபாய்ச் சுருங்கி நில்லாது (அவ்வுருவம் இசையது மிகுதியும் உணர்த்துதற்கு) நீண்ட காலத்து அந்நீட்சிக்கு.

எடுத்துக்காட்டு

'கஃறென்றது' என்பது உருவு. 'சுஃறென்றது' என்பது இசை.

**நூற்பா: 41 (குன்றிசை)**

**குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்** () **குன்று இசை மொழி வயின் நின்று இசை நிறைக்கும்**

**நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே.** (08) **நெட்டெழுத்து இம்பர் ஒத்த குற்றெழுத்தே.**

**நூற்பா: 42 (ஐஔவென்னு)**

**ஐஔ வென்னு மாயீ ரெழுத்திற்** ()**ஐ ஔ என்னும் அ ஈர் எழுத்திற்கு**

**கிகர வுகர மிசைநிறை வாகும்.** (09) **இகர உகரம் இசை நிறைவு ஆகும்.**

**நூற்பா: 43 (நெட்டெழுத்)**

**நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி.** (10) நெட்டெழுத்து ஏழும் ஓர் எழுத்து ஒரு மொழி.

**நூற்பா: 44 (குற்றெழுத்)**

**குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே.** (11) குற்றெழுத்து ஐந்தும் மொழி நிறைபு இல.

**நூற்பா: 45 (ஓரெழுத்)**

**ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி** ()ஓர் எழுத்து ஒரு மொழி ஈர் எழுத்து ஒரு மொழி
**யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட** () இரண்டு இறந்து இசைக்கும் தொடர் மொழி உளப்பட
**மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.** (12) மூன்றே மொழி நிலை தோன்றிய நெறியே.

**நூற்பா: 46 (மெய்யினியக்)**

**மெய்யி னியக்க மகரமொடு சிவணும்.** (13) மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்.

**நூற்பா: 47 (தம்மியல்)**

**தம்மியல் கிளப்பி னெல்லா வெழுத்து** ()தம் இயல் கிளப்பின் எல்லா எழுத்தும்
**மெய்ந்நிலை மயக்க மான மில்லை.** (14) மெய்ந்நிலை மயக்கம் மானம் இல்லை.

**நூற்பா: 48 (யரழவென்னு)**

**யரழ வென்னு மூன்றுமுன் னொற்றக்** () ய ர ழ என்னும் மூன்று முன் ஒற்றக்
**கசதப ஙஞநம வீரொற் றாகும்.** (15) கசதப ஙஞநம ஈர் ஒற்று ஆகும்.

**நூற்பா: 49 (அவற்..ரகார)**

**அவற்றுள்** ()அவற்றுள்
**ரகார ழகாரங் குற்றொற் றாகா.** (16) ரகாரம் ழகாரம் குற்று ஒற்று ஆகா.

**நூற்பா: 50 (குறுமையு)**

**குறுமையு நெடுமையு மளவிற் கோடலிற்** () குறுமையும் நெடுமையும் அளவில் கோடலில்
**றொடர்மொழி யெல்லா நெட்டெழுத் தியல.** (17) தொடர் மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல.

**நூற்பா: 51 (செய்யுளிறுதி)**

**செய்யு ளிறுதிப் போலு மொழிவயின்** ()செய்யுள் இறுதிப் போலும் மொழி வயின்
**னகார மகார மீரொற் றாகும்.** (18) னகாரம் மகாரம் ஈர் ஒற்று ஆகும்.

**நூற்பா: 52 (னகார)**

**னகார முன்னர் மகாரங் குறுகும்.** (19) னகாரம் முன்னர் மகாரம் குறுகும்.

**நூற்பா: 53 (மொழிப்படுத்)**

**மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினு** () மொழிப் படுத்து இசைப்பினும் தெரிந்து வேறு இசைப்பினும்
**மெழுத்திய றிரியா வென்மனார் புலவர்.** (20)எழுத்து இயல் திரியா என்மனார் புலவர்.

**நூற்பா: 54 (அகரவிகர)**

**அகர விகர மைகார மாகும்.** (21) அகரம் இகரம் ஐகாரம் ஆகும்.

**நூற்பா: 55 (அகரவுகர)**

**அகர வுகர மௌகார மாகும்.** (22) அகரம் உகரம் ஔகாரம் ஆகும்.

**நூற்பா: 56 (அகரத்திம்)**

**அகரத் திம்பர் யகரப் புள்ளியும்** () அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
**ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.** (23)ஐ என் நெடும் சினை மெய் பெறத் தோன்றும்.

**நூற்பா: 57 (ஓரளபா)**

**ஓரள பாகு மிடனுமா ருண்டே** () ஓர் அளபு ஆகும் இடனுமார் உண்டே
**தேருங் காலை மொழிவயி னான.** (24) தேரும் காலை மொழி வயினான.

**நூற்பா: 58 (இகரயகர)**

**இகர யகர மிறுதி விரவும்.** (25) இகரம் யகரம் இறுதி விரவும்.

**நூற்பா: 59 (பன்னீருயி)**

**பன்னீ ருயிரு மொழிமுத லாகும்.** (26)பன் ஈர் உயிரும் மொழி முதல் ஆகும்.

**நூற்பா: 60 (உயிர்மெய்)**

**உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா.** (27) உயிர்மெய் அல்லன மொழி முதல் ஆகா.

**நூற்பா: 61 (கதநப)**

**கதந பமவெனு மாவைந் தெழுத்து** () க த ந ப ம எனும் ஆ ஐந்து எழுத்தும்
**மெல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே** (28) எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே.

**நூற்பா: 62 (சகரக்கிளவி)**

**சகரக் கிளவியு மவற்றோ ரற்றே** ()சகரம் கிளவியும் அவற்றோர் அற்றே
**அஐ ஔவெனு மூன்றலங் கடையே.** (29) அ ஐ ஔ எனும் மூன்று அலங்கடையே.

**நூற்பா: 63 (உஊஒஓ)**

**உஊ ஒஓ வென்னு நான்குயிர்** (01) உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிர்
**வவென் னெழுத்தொடு வருத லில்லை.** (30) வ என் எழுத்தொடு வருதல் இல்லை.

**நூற்பா: 64 (ஆஎஒவெனு)**

**ஆஎ** () ஆ எ
**ஒவெனு மூவுயிர் ஞகாரத் துரிய.** (31)ஒ எனும் மூ உயிர் ஞகாரத்து உரிய.

**நூற்பா: 65 (ஆவோடல்)**

**ஆவோ டல்லது யகரமுத லாது.** (32) ஆவோடு அல்லது யகரம் முதலாது.

**நூற்பா: 66 (முதலா)**

**முதலா வேன தம்பெயர் முதலும்.** (33) முதலா ஏன தம் பெயர் முதலும்

**நூற்பா: 67 (குற்றியலு)**

**குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி** () குற்றியல் உகரம் முறைப் பெயர் மருங்கின்
**னொற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.** (34) ஒற்றிய நகரம் மிசை நகரமொடு முதலும்.

**நூற்பா: 68 (முற்றிய)**

**முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅ** ()முற்றியல் உகரமொடு பொருள் வேறுபடாஅது
**தப்பெயர் மருங்கி னிலையிய லான.** (35) அப்பெயர் மருங்கின் நிலையியலான.

**நூற்பா: 69 (உயிரௌ)**

**உயிரௌ வெஞ்சிய விறுதி யாகும்.** (36) உயிர் ஔ எஞ்சிய இறுதி ஆகும்.

**நூற்பா: 70 (கவவோ)**

**கவவோ டியையி னௌவு மாகும்.** (37) க வவோடு இயையின் ஔவும் ஆகும்.

**நூற்பா: 71 (எயென)**

**எயென வருமுயிர் மெய்யீ றாகாது.** (38) எ என வரும் உயிர் மெய் ஈறு ஆகாது.

**நூற்பா: 72 (ஒவ்வுமற்)**

**ஒவ்வு மற்றே நவ்வலங் கடையே.** (39)ஒவ்வும் அற்றே ந அலங்கடையே

**நூற்பா: 73 (ஏவோவெனு)**

**ஏவோ வெனுமுயிர் ஞகாரத் தில்லை.** (40) எ ஓ எனும் உயிர் ஞகாரத்து இல்லை.

**நூற்பா: 74 (உஊகார)**

**உஊ கார நவவொடு நவிலா.** (41) உ ஊகாரம் ந வவொடு நவிலா
(01)

**நூற்பா: 75 (உச்சகார)**

**உச்ச கார மிருமொழிக் குரித்தே.** (42) உச்சகாரம் இரு மொழிக்கு உரித்தே.

**நூற்பா: 76 (உப்பகார)**

**உப்ப கார மொன்றென மொழிப** ()உப்பகாரம் ஒன்று என மொழிப
**விருவயி னிலையும் பொருட்டா கும்மே.** (43) இருவயின் நிலையும் பொருட்டு ஆகும்மே

**நூற்பா: 77 (எஞ்சிய)**

**எஞ்சிய வெல்லா மெஞ்சுத லிலவே.** (44) எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இலவே.

**நூற்பா: 78 (ஞணநம)**

**ஞணநம னயரல வழள வென்னு** () ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும்
**மப்பதி னொன்றே புள்ளி யிறுதி.** (45) அப் பதினொன்றே புள்ளி இறுதி.

**நூற்பா: 79 (உச்சகார)**
**உச்ச காரமொடு நகாரஞ் சிவணும்.** (46) உச்சகாரமொடு நகாரம் சிவணும்.
**நூற்பா: 80 (உப்பகார)**
**உப்ப காரமொடு ஞகாரையு மற்றே** ()உப்பகாரமொடு ஞகாரையும் அற்றே
**வப்பொரு ளிரட்டா திவணை யான.** (47) அப்பொருள் இரட்டாது இவணை ஆன.
**நூற்பா: 81 (வகரக்)**
**வகரக் கிளவி நான்மொழி யீற்றது.** (48) வகரக் கிளவி நான்மொழி ஈற்றது.
**நூற்பா: 82 (மகரத்)**
**மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த** () மகரத் தொடர் மொழி மயங்குதல் வரைந்த
**னகரத் தொடர்மொழி யொன்பஃ தென்ப** () னகரத் தொடர் மொழி ஒன்பஃது என்ப
**புகரறக் கிளந்த வஃறிணை மேன.** (49) புகர் அறக் கிளந்த அஃறிணை மேன
மூன்றாவது "பிறப்பியல்"
**நூற்பா: 83 (உந்திமுதலா)**
**உந்தி முதலா முந்துவளி தோன்றித்** ()
**தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்** ()
**பல்லு மிதழு நாவு மூக்கு** ()
**மண்ணமு முளப்பட வெண்முறை நிலையா**
**னுறுப்புற் றமைய நெறிப்பட நாடி** ()
**யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்** ()
**பிறப்பி னாக்கம் வேறுவே றியல** ()
**திறப்படத் தெரியுங் காட்சி யான.** ()
**நூற்பா: 84 (அவ்வழிப்)**
**அவ்வழிப்** () அவ் வழிப்
**பன்னீ ருயிருந் தந்நிலை திரியா** () பன் ஈர் உயிரும் தம் நிலை திரியா
**மிடற்றுப் பிறந்த வளியி னிசைக்கும்.** () மிடற்றுப் பிறந்த வளியின் சைக்கும்.
**நூற்பா: 85 (அவற்றுள்)**
**அவற்றுள்** () அவற்றுள்
**அஆ வாயிரண் டங்காந் தியலும்.** () அ ஆ ஆயிரண்டு அங்காந்து இயலும்.
**நூற்பா: 86 (இஈஎஏ)**
**இஈ எஏ ஐயென விசைக்கு** () இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
**மப்பா லைந்து மவற்றோ ரன்ன** ()
**வவைதா** ()
**மண்பன் முதனா விளிம்புற லுடைய.** (04)
**நூற்பா: 87 (உஊஒஓ)**
**உஊ ஒஓ ஔவென விசைக்கு** () உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
**மப்பா லைந்து மிதழ்குவிந் தியலும்.** (05) அப்பால் ஐந்தும் இதழ் குவிந்து யலும்.
**நூற்பா: 88 (தத்தந்)**
**தத்தந் திரிபே சிறிய வென்ப.** (06) தம்தம் திரிபே சிறிய என்ப.
**நூற்பா: 89 (ககார)**
**ககார ஙகார முதனா வண்ணம்.** (07)ககாரம் ஙகாரம் முதல் நா அண்ணம்.
**நூற்பா: 90 (சகார)**
**சகார ஞகார மிடைநா வண்ணம்.** (08) சகாரம் ஞகாரம் இடை நா அண்ணம்.
**நூற்பா: 91 (டகார)**
**டகார ணகார நுனிநா வண்ணம்.** (09) டகாரம் ணகாரம் நுனி நா அண்ணம்ழ
**நூற்பா: 92 (அவ்வாறெ)**

அவ்வா றெழுத்து மூவகைப் பிறப்பின. (10)
நூற்பா: 93 (அண்ண)
அண்ண நண்ணிய பன்முதன் மருங்கின் ()
நாநுனி பரந்து மெய்யுற வொற்றத் ()
தாமினிது பிறக்குந் தகார நகாரம். (11)
நூற்பா: 94 (அணரிநுனி)
அணரி நுனிநா வண்ணமொற்ற ()
றஃகா னஃகா னாயிரண்டும் பிறக்கும். (12)
நூற்பா: 95 (நுனிநா)
நுனிநா வணரி யண்ணம் வருட ()
ரகார ழகார மாயிரண்டும் பிறக்கும். (13)
நூற்பா: 96 (நாவிளிம்பு)
நாவிளிம்பு வீங்கி யண்பன் முதலுற ()
வாவயி னண்ண மொற்றவும் வருடவும் ()
லகார ளகார மாயிரண்டும் பிறக்கும். (14)
நூற்பா: 97 (இதழியை)
இதழியைந்து பிறக்கும் பகார மகாரம். (15)
நூற்பா: 98 (பல்லிதழி)
பல்லித ழியைய வகாரம் பிறக்கும். (16)

நூற்பா: 99 (அண்ணஞ்)
அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை ()
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும். (17)
நூற்பா: 100 (மெல்லெழுத்)
மெல்லெழுத் தாறும் பிறப்பி னாக்கஞ் ()
சொல்லிய பள்ளி நிலையின வாயினு ()
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும். (18)
நூற்பா: 101 (சார்ந்துவரி)
சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத் ()
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றுந் ()
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி ()
யொத்த காட்சியிற் றம்மியல் பியலும். (19)
நூற்பா: 102 (எல்லா)
எல்லா வெழுத்தும் வெளிப்படக்கிளந்து ()
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற் ()
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத் ()
தகத்தெழு வளியிசை யரிறப நாடி ()
யளவிற் கோட லந்தணர் மறைத்தே (20)
நூற்பா: 103 (அஃதிவணு)
அஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கும் ()
மெய்தெரி வளியிசை யளபுநுவன் றிசினே. (21)